

திருப்பூர் கிழக்கு மாவட்டம், தாராபுரம் சட்டமன்றத் தொகுதி, சேனாபதிபாளையத்தில் மூலனூர் கிழக்கு ஒன்றியக் கழக நிர்வாகிகள் மற்றும் வாக்குச்சாவடிக் குழு நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் திருப்பூர் கிழக்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் தலைமையில் கழக மகளிர் அணி துணைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ், ப.பழனிசாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். இதில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே. எஸ்.தன்சேகர் உள்பட மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், வாக்குச்சாவடி குழு நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் – அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றியம் –

# கோவளம் ஊராட்சி தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் ஆலோசனைகள் வழங்கினார்!

*கன்னியாகுமரி, ஜூலை 14-*

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றியம், கோவளம் ஊராட்சி திமுக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டமானது 11.07.2026, சனிக்கிழமை அன்று மாலை 6.00 மணியளவில் கோவளத்தில் வைத்து ஒன்றிய செயலாளர் பாபு தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் ரெ. மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பான ஆலோசனைகள் வழங்கி சிறப்புரை ஆற்றினார்.



ஆலோசனை கூட்டத்தில் மாநில கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை செயலாளர் தில்லை செல்வம், ஒன்றிய துணைச் செயலாளர் மெனாண்டஸ், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் திருமதி. ஆரோக்கிய சௌமியா உட்பட ஒன்றிய நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், BLA2, BLC, BDA மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

கோவளம் ஊராட்சி டி.சி நகர் பகுதியில் புதிய நியாயவிலைக்கடை அமைக்கவும், ரேன்சம் டவுன் பகுதியில் உள்ள பகுதிநேர நியாய விலைக்கடையினை முழுநேர நியாய விலைக் கடையாக மாற்றிட மாவட்ட கூட்டுறவு இணைப் பதிவாளருக்கு கோரிக்கை அளித்திட இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

ரேன்சம் டவுன் பகுதியில் உள்ள மக்களின் வாக்குகள் மூன்று வெவ்வேறு வாக்குச்சாவடியில் (பூத் எண் 331, 332, 333) அமைந்துள்ளது. அதனை முறைப்படுத்தி ஒரே வாக்குச்சாவடியின் கீழ் கொண்டு வருவதற்கு தேவையான நடிவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டி மாவட்ட ஆட்சியர் அவர்களை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

வடக்கு குண்டல் பகுதியில் ஏற்பட்டுள்ள குடிநீர் தட்டுப்பாட்டை போக்கி முறையான குடிநீர் வழங்கிடவும், ஏழு சாட்டு பத்து பகுதியில் சாலை வசதி அமைத்திடவும், ரேன்சம் டவுன் பகுதியில் மழை நீர் வடிகால் மற்றும் டி.சி நகர் பகுதியில் கழிவுநீர் ஓடை வசதி அமைத்திட தேவையான நடவடிக்கை மேற்கொள்ள ஊராட்சி நிர்வாகம் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலரை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

கோவளம் ஊராட்சி சன்செட் பாயிண்ட் கடற்கரைப் பகுதியில் உள்ள இடத்தில் தோட்டக்கலையின் சார்பில் பூங்கா அமைப்பதற்கு மாவட்ட நிர்வாகம் சார்பில் முயற்சிகளை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த இடத்தினை தான் மீனவ மக்கள் மீன்களை உலர்த்துவதற்காக காலம் காலமாக பயன்படுத்தி வருகின்றனர். மேலும் இந்த இடத்தில் தான் மீனவ கிராம மக்கள் வழிபடும் சிலுவை பாதை புனித ஸ்தலம் மற்றும் புனித தெரேசா குடிசடியும் அமைந்துள்ளது. மீனவ மக்களின் நலனையும் வாழ்வதாரத்தினையும் கருத்தில் கொண்டு தோட்டக்கலையின் சார்பில் பூங்கா அமைக்கப்படுகின்ற திட்டத்தினை கைவிடும்படி கேட்டு மாவட்ட நிர்வா கத்திற்கு கோரிக்கையை அளிப்பது என இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கன்னியாகுமரி ஜீரோ பாயிண்ட் முதல் கோவளம் வரையிலான மேற்கு கடற்கரை சாலையில் கனரக வாகனங்களால் அடிக்கடி ஏற்படும் சாலை விபத்தினை தடுத்திடும் வகையில் தேவையான இடங்களில் வேகத்தடை அமைத்திட வேண்டி நெடுஞ்சாலைத் துறை நிர்வாகத்தினை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

கடந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் கழக வேட்பாளருக்காக உழைத்த கழக நிர்வாகிகளுக்கும், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினருக்கும் மற்றும் வாக்களித்த அனைத்து வாக்காள பெருமக்களுக்கும் மாவட்ட தி.மு.க மற்றும் ஒன்றிய தி.மு.க சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.



புதுக்கோட்டை மாநகராட்சி 17வது வார்டுக்குட்பட்ட மேல 3ம் வீதி பகுதியில் உள்ள நைனாரிக்குளம் கரை முழுவதும் “மாஸ் கிளினீங்” சூன் 4ம் தேதி நடைபெற்றது. அதன் தொடர்ச்சியாக புதுக்கோட்டை மாநகராட்சி துணை மேயர் புதுக்கோட்டை வடக்கு மாநகர பொறுப்பாளர் எம்.லியாகத் அலி 11.07.2026 அன்று கள ஆய்வு மேற்கொண்டார். நிகழ்வில் உடன் புதுக்கோட்டை மாநகராட்சி மேஸ்திரி பூமாலை மற்றும் கார்த்திக் ஆகியோர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆ. சீனுவாசன்

**ஜூலை 14 (2016)**



இளமைக் காலம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

அச்சிறுப்பாக்கம் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர், பேரூர்ச் செயலாளர், மாவட்டப் பிரதிநிதி, காஞ்சிபுரம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

அச்சிறுப்பாக்கம் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர், அச்சிறுப்பாக்கம் வேளாண்மை கூட்டுறவு வங்கி தலைவர், காஞ்சிபுரம் மாவட்ட கூட்டுறவு ஒன்றிய இயக்குநர் ஆகிய பதவிகள் வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# மேகதாது அணையைத் தடுப்பதற்குரிய ஒரே தலைவர் மு.க.ஸ்டாலின்தான்!

**உ**யிர்நாடியான காவிரி நீர் தொடர்ந்து தமிழ்நாட்டில் பயணிக்க வேண்டும் என்பதை யாரால் சாதிக்க இயலும்?

தமிழ்நாட்டின் 38 மாவட்டங்களில், 20க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் காவிரி ஆற்றின் நீர் குடிநீராகப் பயன்படுகிறது. தமிழ்நாட்டில் 5.5 கோடிக்கும் அதிகமான மக்கள் தங்களின் அன்றாடத் தேவை மற்றும் குடிநீருக்காகக் காவிரி நீரை, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நம்பியுள்ளனர். கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் (Combined Water Supply Schemes) வழியாக மட்டுமே சுமார் 1.7 கோடி முதல் 2 கோடிக்கும் அதிகமான மக்கள் தூய்மையான காவிரிக் குடிநீரை நேரடியாகப் பெறுகின்றனர். காவிரி டெல்டாவிற்கு காவிரி நீரும், விவசாயம் இன்றி நிலநீர் சுரக்க வாய்ப்பே இல்லை. டெல்டாவில் மட்டும் ஒவ்வொரு ஆண்டும் 40 விழுக்காட்டிற்கு மேல் நெல் உற்பத்தி செய்யப்பட்டு தமிழக மக்களின் அடிப்படை உணவின் ஆதாரமாக இருக்கிறது. கர்நாடகா மாநிலத்தில் மேகதாது அணை அமைக்கப்பட்டால், இனி காவிரி டெல்டா மக்கள் குடிப்பதற்குக் கூட நீர் கிடைக்குமா? சிந்திப்போம்!

காவிரி நீரைப் பகிரும் நோக்கத்திற்காக நிகழ்ந்த அனைத்து உயர் மட்ட உறுப்பினர்கள் நிகழ்வுகளிலும், காவிரிப் படுகை நீர்த் தேவை சார்ந்த செய்திகளைத் தொடர்ந்து நான் விளக்கியிருக்கிறேன். மேட்டூர் அணையில் துவங்கி, காவிரி கடலில் கலக்கும்வரை உள்ள காவிரி நீரைப் பயன்படுத்தும் தமிழக மாவட்ட மக்களின் குறை தீர்ப்புக் கலந்துரையாடலிலும் உயர் மட்ட உறுப்பினர்களுடன் பங்கேற்றுள்ளேன். இவ்வாறு மக்களுடன் இணைந்து செயல்பட்டதால்தான் காவிரிப் படுகைக்கு உரிய நீரைப் பெற இயன்றது. இச்செய்திகளைத் தமிழக மக்களிடம் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். காவிரி நீரைப் பகிரும் நிகழ்வில் பங்கேற்ற என் விருப்பம் என்னவென்றால், காவிரி நீரைப் பகிரும் நான்கு மாநிலங்களும் அவற்றிற்குரிய காவிரி நீரைத் தொடர்ந்து பெற்று, இம் மாநிலங்களின் அனைத்து மக்களும் உறவினர்களாக என்றும் வாழ வேண்டும் என்பதன்றி வேறல்ல.

காவிரி நீர் தமிழகத்தின் உயிராகவும், உடலாகவும், காவிரி டெல்டாவின் பல்வேறு கலைகளின் பிறப்பிடமாகவும் திகழ்கிறது. மேகதாது அணை கட்டப்படின், காவிரி டெல்டாவின் நிலை என்னவாகும்? பாலைவனமாகும். இந்நிகழ்வைத் தடுத்து, காவிரி டெல்டாவை யாரால் தொடர்ந்து காக்க இயலும்? தமிழக மக்களின் மேல் அளவு கடந்த பாசமுள்ள, திராவிட மாடல் முன்னாள் தமிழக முதல்வர் ஸ்டாலின் இன்றி வேறு யார்? மக்களுடன் இணைந்து பெரும் போராட்டங்களை இவர் தலைமையில் உடனடியாகத் துவக்கி, தமிழகத்திற்கு உரிய காவிரி நீரைத் தொடர்ந்து பெற்று, காவிரி டெல்டாவின் சிறப்பைத் தொடர்ந்து காப்பாற்றுவதற்கு இவரைத் தவிர தமிழகத்தில் இன்று வேறு யாரும் இல்லை என்பதே உண்மை.

### மேகதாது அணையை அமைக்கக் கர்நாடக மாநிலம் தொடர்ந்து முயற்சிப்பது சரியா?

இதற்கு இம் மாநிலம் தெரிவிக்கும் காரணம், தமிழகத்தில் காவிரி நீர் கடலில் கலக்கிறது என்பதாகும். இம் மாநிலத்தில் உள்ள அணைகள் அனைத்தும் நிறைந்த பிறகே நீரைத் தமிழ்நாட்டிற்குத் திறந்து விடுவதால் தான், இந்த நிலை ஏற்படுகிறது என்பதை கர்நாடகா அரசு இன்று வரை உணரவில்லை. ஒவ்வொரு மாதமும் தமிழகத்திற்கு வழங்க வேண்டிய நீரை, அங்குள்ள அணைகள் நிரம்ப நிரம்ப தமிழ்நாட்டிற்கு வழங்கினால் காவிரி நீர் கடலில் கலக்க வாய்ப்பு ஏற்படுமா? ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் 12ஆம் தேதி மேட்டூர் அணை திறப்பதற்கு முன்பு நீரைத் தமிழகத்திற்கு வழங்கினால், நீர் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படும். தண்ணீர் இல்லாத காரணத்தினால் மேட்டூர் அணை சில ஆண்டுகளில் திறக்கப்படுவ தில்லை. அணைகள் நிரம்பிய பிறகு கர்நாடக அரசு நீரை விடுவதாலேயே, சில ஆண்டுகளில் அவ்வளவு நீரையும் பயன்படுத்த இயலாத நிலை ஏற்படுகிறது. கர்நாடக அரசு, ஒரு முறையாவது அதன் தவற்றை உணர்ந்ததாக இன்று வரை தெரியவில்லை. எனவே காவிரி நீர் கடலில் கலப்பதால் தான் இந்த அணையை அமைப்பதாகத் தெரிவிப்பதை யாராலாவது ஏற்க இயலுமா?

கர்நாடக அரசு அணையைக் கட்டுவதற்கு முன்புசுற்றுச் சூழல், காடு மற்றும் காலநிலை மாற்ற நிறுவனங்கள், தேசிய வனவிலங்கு வாரியம் ஆகியவற்றின், தடையில்லாச் சான்று பெற வேண்டும். மேலும், இந்தியாவைப் பொறுத்தமட்டில், காவிரி நீர் மேலாண்மை ஆணையம், காவிரி நீர் ஒழுங்குமுறைக் குழு, மத்திய நீராய்வு ஆணையம் ஆகியவற்றின் ஒப்புதலையும் பெற வேண்டும். இவற்றில் அரசியல் தலையீடு தவிர்க்கப்பட்டால் அணையைக் கட்டுவதற்கு இவையும் உடன்படாது.

மேகதாது அணையை அமைத்த பிறகு, இம் மாநிலத்தில் ஏற்கனவே இருக்கும் அணைகளில் நீர் நிரம்பி, அவற்றிலிருந்து புது அணையிலும் நீர் நிரம்பினால், ஒரு சொட்டு நீரைக் கூட கர்நாடக அரசு தமிழகத்திற்கு விடுவது அரிது. புது அணையின் கொள்ளளவுக்கு மேல் உள்ள நீரை மாநிலத்தில் தேக்குவதற்கு, கர்நாடக அரசு மற்றொரு அணையைக் கட்டத் துவங்கினாலும் துவங்கும். இதை யாராலும் மறுக்க இயலுமா?

அணை கட்டும் பகுதியில் உள்ள சுற்றுச்சூழியலை ஆராயின், சட்டப்படி அணை அமைப்பதற்கு வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை. தப்பித்தவறி வேறு ஏதோ ஒரு காரணத்தினால் அணை அமைக்கப்பட்டாலும், தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய காவிரி நீர் வழக்கம்போல் பெருமளவு குறைந்து, காவிரி டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மாயவரம் உள்ளிட்ட பகுதிகளில் வழக்கம்போல் விவசாயம் பாதிக்கப்பட்டு, இப்பகுதியில் உள்ள விவசாயிகள் தம் வாழ்வாதாரத்தை இழப்பர். காவிரி நீர் தமிழ்நாட்டின் வேளாண் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்குகிறது. காவிரி நீர்வரத்து குறைந்தால் உணவு உற்பத்தி, விவசாய வருமானம் மற்றும் கிராமப்புற பொருளாதாரம் நேரடியாகப் பாதிக்கப்படும். அணை கட்டப்பட்ட ஓரிரு ஆண்டுகளில் காவிரிப் படுகை வறண்ட பாலைவனமாக உருமாறுவது உண்மை என்பது கர்நாடக மாநிலத்திற்கும் ஒன்றிய அரசிற்கும் தெரியாதா? இதனால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்கள் தொழில் நகரங்களுக்கு இடம் பெற வாய்ப்புள்ளது என்பதை மறுக்க இயலுமா?

இவற்றைச் சிந்தித்த தமிழக அரசு, இதற்கு முன்பு நான்கு முறையும், தற்பொழுது ஐந்தாவது முறையும், மேகதாது அணைத் திட்டத்திற்கு எதிராகத் தமிழக அனைத்துக் கட்சி உறுப்பினர்களின் ஆதரவுடன் தனித்தீர்மானம் 19 ஜூன் 2026 அன்று ஒருமனதாக நிறைவேற்றியது. தமிழக அரசின் இந்த முடிவுக்கு, கர்நாடக நீர் வளத்துறை அமைச்சர், தமிழ்நாடு அரசு விரும்பும் எத் தீர்மானத்தையும் நிறைவேற்றிக் கொள்ள முழு சுதந்திரம் இருக்கிறது. எனவே, எத்தனை தீர்மானங்களை வேண்டுமானாலும் நிறைவேற்றிக் கொள்ளட்டும். அதைக் கவனிப்பது கர்நாடக அரசின் வேலை அல்ல. அது மட்டுமல்லாமல், இத் தீர்மானம் கர்நாடகாவுக்கு ஒரு பிரச்சினையும் இல்லை என்றும், மேலும் ஏற்கனவே இத்திட்டத்தை உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தி விட்டது எனவும் தெரிவித்துள்ளார். அதற்கான உத்தரவும் கர்நாடகா அரசிடம் இருக்கிறது என அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்திருக்கிறார். மேகதாது திட்டத்திற்கு எத்தடையும் இல்லை என்றும், திட்டத்தை விரைவாகச் செயல்படுத்த வேண்டும் என்றும் கர்நாடக முதல்வர் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். இவர்களின் கருத்துக்களை தமிழக அரசு ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.



### மேகதாது அணைத் திட்டத்திற்கு எதிரான தமிழ்நாட்டின் மனு முன்கூட்டியதாகக் கருதப்படுவதற்குக் காரணங்கள் என்ன?

முதலில் தமிழ்நாடு அறிய வேண்டிய செய்தி, மேகதாது அணைத் திட்டம் உச்சநீதிமன்றத்தால் அனுமதி பெற்றதல்ல. விரிவான திட்ட அறிக்கையை (Detailed Project Report) நீதிமன்றம் தடை செய்யவில்லை. இதற்கு முக்கிய காரணம், கர்நாடக மாநிலம் இத்திட்டத்தை நிறைவேற்ற, தானே ஒரு முடிவைச் சட்டப்படி எடுக்க இயலாது. ஏனென்றால் இத்திட்டம். 1. காவிரி நீர் மேலாண்மை ஆணையம் (Cauvery Water Management Authority /CWMA), 2. காவிரி நீர் ஒழுங்குமுறைக் குழு (Cauvery Water Regulation Committee /CWRC), 3. மத்திய நீராய்வு ஆணையம் (Central Water Commission CWC) ஆகியவற்றின் பரிசீலனைக்கு உட்பட்டவை. இவையும் இன்றைய கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த, ஒன்றிய துணை அமைச்சர் தலைமை தான் இயங்குகின்றன. இவற்றையும் தமிழக அரசு ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

இந்த அணையை அமைப்பதால் நிகழும் சில முக்கிய நிகழ்வுகளான, சுற்றுச்சூழல் நீரில் மூழ்கல் (Environmental Submergence): காவிரி வனவிலங்குச் சரணாலயம் மற்றும் காப்பகக் காடுகளில் 3,100 ஹெக்டேருக்கும் மேற்பட்ட பகுதி நீரில் மூழ்கல் (Environmental Submergence Over3,100 Ha of the Cauvery Wildlife Sanctuary and Reserve Forest), இதனால் பல அரிய வகை உயிரினங்கள் அழியும் வாய்ப்பிருக்கிறது (இவைமிக பெரிய அணில் இனம், இந்தியாவில் மட்டுமே காணப்படும் சிறுமான், நீர்நாய்கள் மற்றும் சதுப்பு நில முதலைகள், ஆசிய யானைகள், புலிகள், சிறுத்தைகள் மற்றும் சோம்பேறி கரடிகள், அழியும் நிலையிலுள்ள கழுகு இனங்கள் உட்பட 230க்கும் மேற்பட்ட பறவைகள்). எனவே, மேகதாது


முனைவர்
**ப.மு. நடராசன்**
முன்னாள் இயக்குநர்
பருவக்கால மாற்ற ஆய்வு மையம்
பெரியார் மணியம்மைப் பல்கலைக் கழகம் – தஞ்சாவூர்
(இருப்பு – அமெரிக்கா)




அணை கட்டுவதற்கு முன், கீழ்க்கண்ட மத்திய அமைப்புகளின்1. சுற்றுச்சூழல், காடு மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகங்களள் (Environmental Clearance (EC), Forest Clearance (FC) under the Forest Conservation Act, 1980, Clearance for submergence of forest land, including wildlife sanctuary areas) 2. தேசிய வனவிலங்கு வாரியம் (National Board for Wildlife), ஆகிய நிறுவனங்களின் அனுமதி பெற வேண்டும். மேகதாதுத் திட்டத்தால் காவிரி வனவிலங்குச் சரணாலயத்தின் 3,100ஹெக்டேருக்கும் அதிகமான பகுதி நீரில் மூழ்கவுள்ளதால், கட்டுமானப் பணிகள் தொடங்குவதற்கு முன் தேசிய வனவிலங்கு வாரியத்தின் (National Board for Wildlife/NBWL) அனுமதி கட்டாயமாகும். இவை அனைத்தும் முடிந்த பிறகே, இத்திட்டம் உச்ச நீதிமன்றத்தில் விவாதிக்கப்பட்டு, உச்சநீதிமன்றம் இறுதி முடிவை எட்ட இயலும்இத்திட்டத்தை செய்ய இயலும். மேலும், கர்நாடக மாநிலம் முந்தைய உச்ச நீதிமன்ற உத்தரவுகளைப் பின்பற்றியே உச்ச நீதிமன்றத்தை நாட வேண்டும். இந்நிகழ்வுகள் நடப்பதற்கு முன்பாகவே தமிழக அரசு இத்திட்டத்திற்கு மறுப்புத் தெரிவித்ததால், தமிழக அரசின் வேண்டுதலை உச்ச நீதிமன்றம் மறுத்தது. எனவே தமிழக அரசு இதை ஒரு தடையாக நினைக்க வேண்டாம்.

### வனவிலங்குச் சரணாலயம், சுற்றுச்சூழல் ஆகியவற்றை அழித்து மேகதாது அணை கட்டுவதன் நோக்கமும் அணை பற்றிய சில தகவல்களும்

குடி நீருக்காகவும், 400 மெகாவாட் (Megawhat/400,000 units) புனல் மின் உற்பத்திக்காகவும் இந்த அணை கட்டப்படுவதாகக் கர்நாடக அரசு தெரிவிக்கிறது. காவிரி நதி, கர்நாடகத்தை விட்டு தமிழ்நாட்டின் தர்மபுரி மாவட்டத்தில் நுழையும் இடத்திற்கு மேல்பகுதியில், சுமார் 4 முதல் 5 கிலோமீட்டர் தொலைவில் இந்த அணையை அமைக்கத கர்நாடக அரசு திட்டமிடப்பட்டுள்ளது. இந்த அணையின் கொள்ளளவு 67.16 டிஎம்சி (TMC, Thousand Million Cubic feet). ஒரு டிஎம்சி நீர் என்பது 28.3168 மில்லியன் கன மீட்டர். இந்த நீரைப் பயன்படுத்தி, சென்னையில் இன்று வாழும் மக்களுக்கு ஒரு மாதத்திற்குத் தங்கு தடையற்ற குடிநீர் வழங்க இயலும். இந்த அணையில் ஒரு முறை தேக்கப்படும் நீரைப் பயன்படுத்தி, சென்னை மக்களுக்கு 67 மாதங்களுக்கு, ஐந்து ஆண்டுகளைத் தாண்டி குடிநீர் வழங்கலாம். மேகதாது அணையைக் கட்டாது இம்மாநிலத்தின் குடிநீர்த் தேவையை எட்ட இயலாதா? இது உண்மையா? இந்த அணையைக் கட்ட ஆகும் செலவு 9,000 கோடி ரூபாய். இம் மாநிலத்தின் குடிநீருக்காக, வனவிலங்குச் சரணாலயம், சுற்றுச்சூழல் ஆகியவற்றை அழித்து, இத்தனை கோடி ரூபாய் செலவு செய்து அணையைக் கட்ட வேண்டுமா?

### கர்நாடக மாநிலத்தில் அரபிக்கடலில் கலக்கும் நீரை குடிநீராகப் பயன்படுத்துவது தவறா?

கர்நாடகாவின் மேற்கே பாயும் நதிகள், ஆண்டுதோறும் சராசரியாக சுமார் 2,000 டிஎம்சி அளவிலான மேற்பரப்பு நீரை அரபிக்கடலில் சேர்க்கின்றன. மாநிலத்தின் மொத்த மேற்பரப்பு நீர்வளத்தில் இது 58விழுக்காடுக்கு மேல் பங்காற்றுகிறது, ஆனால் இந்நதிகள் மாநிலத்தின் புவியியல் பரப்பளவில் 20விழுக்காடுக்கும் குறைவான பகுதியையே கொண்டுள்ளன. இந்த நீரின்

தொடர்ச்சி நாளை